தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பொதுப் பணிகள் - ஒப்புதல் பெற்ற பதவி உயர்வுக்கான பெயர் பட்டியல் - தள்ளி வைக்கப்பட்ட நேர்வுகள் - பட்டியலில் மீளச்சேர்த்தல் - ஊதிய நிர்ணயம் செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை

அரசு ஆணை (நிலை) எண்.203 நாள் : 30.10.2000

படிக்க :

1. அரசு ஆணை நிலை எண்.985, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி.எம்) துறை, நாள் 19.9.81.
2. அரசு கடித எண்.44445/பணி-எம்/82-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 8.6.82.
3. அரசு ஆணை நிலை எண்.977, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி-3) துறை, நாள் 6.10.86.
4. அரசு ஆணை நிலை எண்.368, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 18.10.93.

-----

ஆணை :

உயர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கும்பொழுது, அப்பட்டியலில் சேர்க்காமல் தள்ளி வைக்கப்பட்டவர்களின் பெயர்கள், முறையீடு/மேல் முறையீடு/அரசின் பரிசீலனைக்குப் பின்னர் பட்டியலில் முதுநிலையின் அடிப்படையில் சேர்க்கப்பட்டு உயர் பதவியில் பணியமர்த்தப்படுபவர்களுக்கு அவர்களைவிடப் பணியில் இளையோர்கள் பதவி உயர்வு பெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு அவ்வுயர் பதவியில் அடிப்படை விதி 27-ன் விதி முறைமை (17)-ன் கீழ் அவர்கள் உயர் பதவியில் பதவி ஏற்ற நாளிலிருந்து ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதற்குரிய பணப்பயன் அந்நாளிலிருந்தே வழங்கப்படுகிறது.

2. சில நேர்வுகளில் முறையீடு/மேல் முறையீடு/அரசின் பரிசீலனைக்குப் பின்னர், முந்தைய பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டு பதவி உயர்வு அளிக்கப்படு முன்னரே அரசு ஊழியர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலோ அல்லது பணியிலிருக்கும்பொழுது/பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் மரணமடைந்து விட்டாலோ அத்தகைய நேர்வுகளில் முந்தைய பெயர் பட்டியலில், தகுதி மற்றும் முதுநிலையின் அடிப்படையில் அவர்களது பெயர்கள் சேர்க்கப்பட்ட போதிலும், உயர் பதவியில் பணியேற்க முடியாமல் போய்விடுகிறது. அத்தகையோருக்கு அடிப்படை விதி 27-ன் விதி முறைமை (17)-ன் கீழ் ஊதியம் நிர்ணயித்து பணப்பயன் வழங்க இயலாது.

3. இத்தகைய நிகழ்வுகள் பல்வேறு நிர்வாக காரணங்களால் ஏற்படுவதால், அரசு ஊழியருக்கு ஏற்படும் பண இழப்பு தவிர்க்கப்படவேண்டும் என்ற கருத்து அரசால் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப்பின், மேற்கண்டவாறு பாதிக்கப்படும் நபர்களுக்கு, முந்தைய பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டால் அவர்கள் ஓய்வு பெற்ற நாளையோ அல்லது மரணமடைந்த நாளையோ இதில் எது முன்னர் நிகழ்கின்றதோ, அதை கருத்தியல்அளவில் ( Notional ) ஊதிய நிர்ணயம் செய்யும் நாளாகக் கொண்டு, அதனடிப்படையில் அவர்களுடைய ஓய்வூதியம் மற்றும் ஓய்வு பெறுவதனால கிடைக்கக்கூடிய மற்ற பணப்பயன்களை நிர்ணயிக்க ஏதுவாக, கருத்தியலான ஊதிய நிர்ணயம் செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.

4. அதனடிப்படையில் கீழ்க்கண்ட ஆணைகள் வெளியிடப்படுகின்றன :-

(அ) பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்ட ( Deferred ) அரசு ஊழியர், வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற பின்னர், முறையீடு/மேல் முறையீடு/அரசின் பரிசீலனைக்குப் பின்னர் தகுதி மற்றும் முதுநிலை அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு முந்தைய பட்டியலில் சேர்க்கப்படுவார்களேயானால், அத்தகையோருக்கு இளையோர் பதவி உயர்வு பெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பணப்பயன்கள் அனைத்தும் அடையும்பொருட்டு, அடிப்படை விதி 27-ன் விதி முறைமை (17)-ன் கீழ் ஓய்வுபெற்ற நாளன்று கருத்தியலான ( Notional ) ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

(ஆ) பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்ட ( Deferred . ) அரசு ஊழியர், பணியிலிருக்கும்பொழுது/பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்பு மரணமடைந்தால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டதாகக் கருதப்பட வேண்டும். அத்தகையோருக்கு, இளையோர் பதவி உயர்வுபெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பணப்பயன்கள் அனைத்தும் அடையும்பொருட்டு, அடிப்படை விதி 27-ன் விதி முறைமை (17)-ன் கீழ், அவர்கள் கடைசியாக பணியாற்றிய நாள் அல்லது வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற நாள், இதில் எது முன்னர் நிகழ்கின்றதோ அந்நாளிலிருந்து கருத்தியலான ( Notional ) ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

5. இவ்வாணையின் அடிப்படையில் அடிப்படை விதி 27-ன் விதி முறைமை (17)-க்கு தகுந்த திருத்தம் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி-4) துறையால் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சை. முனீர் ஹோதா
அரசுச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை - 600 009.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்/மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட நீதிபதிகள்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை - 600 104.
பதிவாளர், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், சென்னை - 600 006.
கருவூலம் மற்றும் கணக்கு இயக்குநர், சென்னை - 600 015.
மாநில கணக்காயர் 1 மற்றும் 2, சென்னை - 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், வடக்கு/தெற்கு/கிழக்கு, சென்னை-79/35/5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 600 009.

நகல் :- அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 600 009.
(அனைத்துப் பிரிவுகளுக்கும் அனுப்பக்கோரி)
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை (அனைத்துப் பிரிவுகள்)